26.03.2026 OS.No.60/2024 PW1 Name :.புவனேஸ்வரி

குறுக்கு விசாரணை

1. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலை படித்து பார்த்தேன். அந்த பதிலை என்னுடைய முதன்மை சாட்சியத்தில் மறுத்து கூறாததற்கு என்ன காரணம் என்றால் எனக்கு தெரியவில்லை. 4ம் பிரதிவாதியின் பெயர் திலகவதி என்றும் உள்ளது. 4ம் பிரதிவாதி சசிகலா என்றும் தான் கையெழுத்து போடுவார். என்னுடைய தாத்தா மூலமாக என் அப்பாவிற்கு சொத்து பாகத்தில் வந்தது. 1968 மற்றும் 1975 ஆண்டுகளில் என் தகப்பனார் தனியாக சொத்து வாங்கியது எனக்கு தெரியும். அப்போது நான் சிறுவயதாக இருந்தேன்.
2. யாரிடம் எவ்வளவு தொகைக்கு சொத்து வாங்கபட்டது என்பது எனக்கு தெரியாது. தாவா சொத்தின் வில்லங்க சான்றிதழ், வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. அது எதிர்தரப்பினரிடம் உள்ளது. நான் சுமார் 6 மாதம் மட்டும் தான் என் கணவருடன் சேர்ந்து வாழ்ந்தேன் அதன்பின் கடந்த 35 ஆண்டுகளாக என் பெற்றோர் வீட்டில்தான் வசித்து வருகிறேன். என் மகன் எம்டெக் முடித்து சென்னையில் பணிபுரிகிறார் அவருக்கு திருமணமாகவில்லை. நான் டைலரிங் வேலை செய்து சம்பாதித்து என் மகனை படிக்க வைத்தேன். 2014ல் என் தகப்பனார் இறந்தார்.
3. என் தகப்பனார் இறந்த தேதிவரை மகன்கள் கொடுமைபடுத்தியதாக காவல்நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை. நான் கடன்

வாங்கியும் என் மகனை படிக்க வைத்தேன். நான் சம்பாதித்து சேர்த்து வைத்த சுமார் 40 பவுன் நகைகளை பிரதிவாதிகளுக்கு வியாபாரம் செய்வதற்காக கொடுத்து உதவினேன். அவ்வாறு எந்த நகையும் கொடுக்காததால் அதை திரும்ப பெற நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய அப்பா எவ்வளவு தொகையை யார் முன்னிலையில் பிரதிவாதிகளுக்கு கொடுத்தார் என்பதை வழக்கில் கூறவில்லை.

4. 24.10.2013ல் என் தகப்பனார் இறந்துள்ளார் என்றால் 2014ல் தான் இறந்தார். பிரதிவாதிகள் பெயரில் தாவா சொத்துகளுக்கு தனிபட்டா உள்ளது என்றால் அவ்வாறு இல்லை. தாவா வீடு பிரதிவாதிகளுக்கு மட்டும் உரிமையானது என்றால் பாகம் பிரிக்காததால் அனைவருக்கும் உரிமை உள்ளது. தாவா சொத்துகளை உள்ளடக்கி பிரதிவாதிகள் 06.06.2020 தேதியில் பதிவு செய்யபட்ட பாகபிரிவினை ஏற்படுத்தியுள்ளார்கள் என்றால் அது தெரிந்து தான் வழக்கு போட்டேன். அந்த ஆவணம் ஏற்பட்டு காலம் கடந்து 4 ஆண்டுகள் கழித்து வழக்கு போட்டுள்ளேன் என்றால் எனக்கு தெரிந்தவுடன் தான் வழக்கு போட்டேன்.

5. அறிவிப்பு கொடுக்காமல் வழக்கு போட்டதற்கு என்ன காரணம் என்றால் பிரதிவாதிகள் சொத்தை பிரித்து கொடுப்பதாக கூறி எனக்கு தெரியாமல் பத்திரம் செய்துவிட்டார்கள். தற்போது என்னிடம் காட்டபடும் 06.06.2020 தேதியிட்ட பாகபிரிவினை ஆவணம் தான் பிரதிவாதிகள் ஏற்படுத்தி கொண்டதாகும். அதை தற்போது தான் பார்க்கிறேன். அது என் பெயருக்கு எழுதி கொடுத்ததாக குறிப்பிடபட்டுள்ளது. அந்த

ஆவணத்தில் உள்ள 2 1/2 ஏக்கர் சொத்து 2, 3, 5 பிரதிவாதிகள் சுவாதீனத்தில் உள்ளது.

6. மேற்படி ஆவணம் பி.சா.ஆ.1. அந்த சொத்து உட்பிரிவு செய்யபட்டுள்ளது என்றால் அவ்வாறு இல்லை. சொத்துகள் குறித்து வழக்கிற்கு முன் எங்கள் குடும்பத்தில் பஞ்சாயத்து நடந்தது. அதில் சங்கர், சரவணன், தேவன் ஆகியோர்கள் கலந்து கொண்டார்கள். தற்போது காட்டபடும் 13.07.2009ல் தேதியிட்ட ஆவணத்தில் என்னுடைய கையெழுத்து இல்லை. அந்த ஆவணத்தில் உள்ள சாட்சிகள் செல்வசேகரன், யசோதா, ராஜேந்திரபாபு ஆகியோர்களுக்கும் எனக்கும் எந்த விரோதமும் இல்லை.
7. வக்காலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். 13.07.2009 ஆவணத்தை பற்றி பதிலில் கூறியுள்ள நிலையில் அதை ஒப்புகொள்வதால் தான் அதை முதல் விசாரணையில் மறுக்கவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். 13.07.2009ல் சொத்துகள் குறித்து எங்களுக்குள் பாகபிரிவினை ஏற்பட்டு அதை ஒப்புக்கொண்டு பின் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கபடுகிறது).

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 26/03/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.03.26 17:23:34 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.